**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ம் நாள் திங்கட்கிழமை**

<u>O.S. 52/2025</u>

வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாடிமுத்து | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | மகாலிங்கம் | கிராமம் | : | தென்னவராயன்நல்லூர் |
| ஜாதி | : | | தொழில் | : | பூக்கடை |
| சமயம் | : | | வயது | : | 47/26 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 15.09.2021 ம் தேதியில் என் தகப்பனார் எனக்கு எழுதிகொடுத்த பதிவு செட்டில்மெண்ட் ஆவணம் No.4599/2021 அசல் **வா.சா.ஆ.1,** ஆகவும்

கடந்த 04.11.1979 ம் தேதிய என் தகப்பனார் அவர்களுக்கு சக்கரபாணிபிள்ளை எழுதிகொடுத்த சுத்த கிரய சாசனம் பதிவு No.2480/1971 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2,** ஆகவும்

கடந்த 26.06.2025 ம் தேதிய பட்டா மாறுதல் உத்தரவு கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3**, ஆகவும்

மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.4**, ஆகவும்

கடந்த 02.09.2021 ம் தேதிய வீட்டுவரி ரசீது அசல் **வா.சா.ஆ.5**, ஆகவும்

என் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **வா.சா.ஆ.6**, ஆகவும் குறியீடு செய்து தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6**--- வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

//பிரதிவாதி தரப்பில் தோன்றா தரப்பினராக உள்ளார் //

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.02.16 18:44:43 +0530